வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி 08.12.2025  நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வந்தே மாதரம் என்ற மந்திரம் இந்திய மக்களுக்கு சக்தியையும், அர்ப்பணிப்பு உணர்வையும் அளித்து, சுதந்திர இயக்கத்திற்கு உத்வேகம் அளித்ததாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மக்களவையில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் வந்தே மாதரம் குறித்த உரை எதிர்கால தலைமுறையினரை ஊக்குவிக்கும் ஒரு வரலாற்று ஆவணம் என்று திரு அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்படாத கடன் செயலிகளால் மக்கள் சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாக்க அரசும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுச்சேரி லோக்நிவாசில் நடைபெற்ற கொடிநாள் விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கலந்து கொண்டார்.

மோடி-வந்தே மாதரம் 1 (11)

வந்தே மாதரம் என்ற மந்திரம் இந்திய மக்களுக்கு சக்தியையும், அர்ப்பணிப்பு உணர்வையும் அளித்து, சுதந்திர இயக்கத்திற்கு உத்வேகம் அளித்ததாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். தேசிய பாடலான வந்தே மாதரத்தின் 150 ஆவது ஆண்டு விழாவை ஒட்டி, இன்று மக்களவையில் விவாதத்தை தொடக்கி வைத்து பேசிய அவர், வந்தே மாதரத்தின் 150 ஆண்டுகள் என்பது அந்த மகத்தான அத்தியாயத்தையும், அதன் மகிமையையும் மீண்டும் நிலைநாட்ட கிடைத்த ஒரு வாய்ப்பு என்று கூறினார். தேசிய பாடலான வந்தே மாதரம் நம் நாட்டிற்க்கு 1947 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று தந்தது என்றும், சுதந்திர போராட்ட வீரர்கள் கண்ட கனவுகளை நனவாக்க மக்களை இயக்கும் சக்தியாக வந்தே மாதரம் திகழ்ந்த தாகவும் தெரிவித்தார். பிரதமரின் உரை குறித்த கூடுதல் தகவல்கள்……..

(வாய்ஸ்)

மோடி-வந்தே மாதரம் 2 (15)

(வாய்ஸ்)

தேசிய பாடலான வந்தே மாதரம் 1875 ஆம் ஆண்டு பங்கிம்சந்திர சட்டர்ஜியால் எழுதப்பட்டது. வந்தே மாதரம் பாடல்  குறித்த விவாதத்தை மக்களவையில் தொடக்கி வைத்து பேசிய பிரதமர் அதன் நூறாவது ஆண்டு

நிறைவை கொண்டாடிய போது அவசர நிலையால் நாடு அதிர்ந்தது என்று கூறினார். தேசிய பாடலை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாட வேண்டிய அந்த நேரத்தில், இந்திய அரசியலமைப்பு சட்டம் கழுத்து நெறிக்கப்பட்டு, தேசபக்திக்காக வாழ்ந்தவர்கள் மற்றும் உயிர் தியாகம் செய்தவர்கள் சிறை கம்பிகளுக்கு பின்னால் அடைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். வந்தே மாதரம் என்பது வெறும் அரசியல் சுதந்திரத்திற்கான மந்திரம் மட்டும் அல்ல என்றும், பாரத மாதாவின் காலனித்துவத்தின் தலைகளில் இருந்து விடுவிப்பதற்கான ஒரு புனிதமான போர் முழக்கம் என்றும் அவர் தெரிவித்தார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியாவில் ஆழமாக வேரூன்றிய ஒரு கருத்தை வந்தே மாதரம் மீண்டும் தூண்டியது என்றும் தெரிவித்தார். பல்வேறு வகையான ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்த பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக, 1875 ஆம் ஆண்டு ஒரு கிளர்ச்சியின் போது எழுதப்பட்டதே வந்தே மாதரம் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

மோடி-வந்தே மாதரம் 3 (6)

விவாதத்தில் பங்கேற்று பேசிய காங்கிரஸ் எம்பி திரு கவுரவ் கோகோய், சுதந்திர போராட்டத்தின் போது, வங்காளத்தை சேர்ந்த பல எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் மக்களை ஊக்கப்படுத்தும் பாடல்களை எழுதியதாக தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடி தனது உரையில்,

வந்தே மாதரம் குறித்த விவாத த்திற்கு அரசியல் சாயம் பூச முயன்றதாகவும், திரு கோகோய் குற்றம் சாட்டினார்.

*அனுராக் தாக்கூர்* (10)

மக்களவையில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் வந்தே மாதரம் குறித்த உரை எதிர்கால தலைமுறையினரை ஊக்குவிக்கும் ஒரு வரலாற்று ஆவணமாக மாறியுள்ளது என்று பிஜேபி உறுப்பினர் திரு அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார். மக்களவையில் பிரதமர் திரு நரேந்திர மோடி வந்தே மாதரம் குறித்த விவாத த்தை தொடங்கியபோது எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி அவையில் இல்லாத தற்கு பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்திற்கு வெளியே ஆகாஷ்வாணி செய்திகளுக்கு பேட்டியளித்த பிஜேபி உறுப்பினர் திரு மனோஜ் திவாரி, இந்தியாவின் ஒற்றுமை மற்றும் அதன் கலாச்சாரத்தின் சின்னமாக வந்தே மாதரம் இருப்பதால், இது மிகவும் முக்கியமான விவாதம் என்று தெரிவித்தார்.

*சி பி இராதாகிருஷ்ணன்* (12)

முப்படைகளின் கொடிநாள் நிதிக்கு தாராளமாக பங்களிக்குமாறு, உறுப்பினர்களுக்கு, மாநிலங்களவை தலைவர் திரு சி பி இராதாகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இன்று மாநிலங்களவையில் பூஜ்ய நேரத்தில் பேசிய அவர், ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7 ஆம் தேதி போரில் உயிரிழந்தவர்களையும், நாட்டின் எல்லைகளை பாதுகாப்பதற்காக மட்டுமன்றி, பயங்கரவாதம், கிளர்ச்சிக்கு எதிராக போராடிய சீருடை வீரர்களை கவுரவிக்கும் வகையில், ஆயுதப்படை கொடிநாள் அனுசரிக்கப்படுகிறது என்றார். மேலும், கொடி நாள் நிதிக்காக திரட்டப்படும் நன்கொடைகள் போரில் உயிரிழந்த வீரர்களை சார்ந்தவர்கள் மற்றும் போரால் பாதிக்கப்பட்ட வீரர்கள் போன்றோரின் மறு வாழ்வுக்கு இந்த நிதி செலவிடப்படுவதாகவும் திரு சி பி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

*நிர்மலா சீதாராமன்* (13)

அங்கீகரிக்கப்படாத டிஜிட்டல் கடன் செயலிகளின் செயல்பாடுகளை தடுக்கும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பிற சம்மந்தப்பட்ட ஒழுங்குமுறை நிறுவனங்களுடன், அரசு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா

சீதாராமன் தெரிவித்துள்ளார். இன்று மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், இந்த ஆண்டு ஜுலை 1 ஆம் தேதி முதல் ரிசர்வ் வங்கி அதன் இணையதளத்தில் டிஜிட்டல் கடன் செயலிகள் குறித்த புதிய பகுதியை வெளியிட்டுள்ளது என்றும், இதன் மூலம், இந்த செயலிகள் குறித்த தகவல்களை வாடிக்கையாளர்கள் சரிபார்க்க முடியும் என்றும் கூறினார். அங்கீகரிக்கப்படாத கடன் செயலிகளால் மக்கள் சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாக்க அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும் அவ்வப்போது பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் மேலும் கூறினார்.

*விமான போக்குவரத்து (10)*

விமான பாதுகாப்பு என்பது அரசாங்கத்தின் மிக முக்கியமான முன்னுரிமை என்றும், அதில் எந்த சமரசத்திற்கும் இடமில்லை எனவும் மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு கூறியுள்ளார். இன்று மாநிலங்களவையில் விமான போக்குவரத்து தொடர்பான வழிகாட்டுதல்களை அமல்படுத்துவது குறித்த துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், விமானங்கள் ரத்து செய்யப்பட்டது குறித்து மத்திய அரசு விசாரணை நடத்தி வருவதாக தெரிவித்தார். விமான

பயணிகளின் சிரமங்களை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளதாகவும், இந்த விஷயத்தில் மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கொடிநாள் விழா (11)

முப்படை வீரர்களின் கொடிநாள் விழா புதுச்சேரி லோக்நிவாசில் இன்று நடைபெற்றது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஸ்நாதன் இவ்விழாவில் கலந்து கொண்டு, கடந்த ஆண்டு கொடிநாள் நிதிக்கு அதிக பங்களிப்பு செய்த அரசுத் துறைகள், நிறுவனங்கள், மற்றும், தனி நபர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கி மரியாதை செய்தார். இவ்விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, தலைமை செயலர் டாக்டர் சரத் சவுகான், முன்னாள் படை வீரர்கள் துறையின் செயலர் திரு கேசவன், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் மற்றும் பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் பேசிய துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முப்படை வீரர்களின் தியாகம் போற்றுதலுக்கு உரியது என்றார்.

S-I-R (10)

புதுச்சேரியில் நடைபெற்று வரும் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியில் இதுவரை, 99.98 சதவிகிதம் அதாவது 10 லட்சத்து, 21 ஆயிரத்து 404 கணக்கெடுப்பு படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், இதுவரை, 10 லட்சத்து, 20 ஆயிரத்து 557, அதாவது 99.90 சதவிகித படிவங்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சிறப்பு தீவிர திருத்தப்பணியில் வழங்கப்பட்ட படிவத்தை பூர்த்தி செய்து வழங்கிய வாக்காளர்கள் சிலரை சந்தித்தோம். இதில், புதுச்சேரி பேருந்து நிலையம் அருகில் உள்ள மருந்தக உரிமையாளர் திரு ஜோதி வேணுகோபால் நமது செய்தியாளரிடம் கூறுகையில்...........

(வாய்ஸ் - ஜோதி வேணுகோபால்)

ஹேக்கத்தான் 2025 (17)

மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் சார்பில் ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் – 2025 புதுச்சேரியில் இன்று தொடங்கி 2 நாட்கள் நடைபெறுகிறது. அரியூர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நடைபெறும் ஹேக்கத்தான் 2025 -ல் இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு

தொழில்நுட்ப கல்லூரிகளில் இருந்து 120 மாணவ-மாணவிகள் மற்றும் 20 பேராசிரியர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதுகுறித்து அக்கல்லூரியின் முதல்வர் திரு பிரதிப் கூறுகையில், அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள், தொழில்துறைகள் மற்றும் சமூக அமைப்புகள் போன்றவை எதிர் கொள்ளும் தொழில்நுட்ப பிரச்சனைகளுக்கு தீர்வுகளை உருவாக்கும் வகையில் இவர்கள் 20 குழுக்களாக பிரிக்கப்பட்டு, தொடர்ந்து, 36 மணி நேரம் பணியாற்றி, சாப்ட்வேர் கோடிங் மூலம், பிரச்சனைகளுக்கு தீர்வுகளை கண்டுபிடிப்பார்கள் என்றார். இதில், சிறப்பான முறையில் தீர்வுகளை கண்டுபிடிக்கும் குழு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு, அக் குழுவிற்கு 1.5 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படும் என்றும் கூறினார். விக்சித் பாரத் 2047 என்ற குறிக்கோளை அடையும் வகையில் இந்த ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் 2025 நடத்தப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வரி மசோதா (18)

சுகாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பு வரி மசோதா 2025 இன்று மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மசோதா பான் மசாலா போன்ற பொருட்களின் உற்பத்தி மற்றும் மத்திய

அரசால் அறிவிக்கப்படக் கூடிய பிற பொருட்களின் மீது செஸ் வரி விதிக்க வகை செய்கிறது. இந்த செஸ் வரியில் இருந்து கிடைக்கும் வருமானம், பொது சுகாதாரம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கான செலவினங்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்த மசோதாவை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மாநிலங்களவையில் தாக்கல் செய்து பேசியபோது, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு முக்கிய விஷயங்களான சுகாதார பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் கணிசமான நிதி நீரோட்டத்தை உருவாக்குவதே இந்த மசோதாவின் நோக்கம் என்று கூறினார். அத்தியாவசிய பொருட்களுக்கு செஸ் வரி விதிக்கப்படவில்லை என்றும், மக்களின் உடல் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் குறிப்பிட்ட சில பொருட்களை பயன்படுத்துபவர்களுக்கு மட்டுமே இந்த செஸ் வரி ஒரு தடையாக இருக்கும் என்றும் கூறினார். இது, நிச்சயமாக சாதாரண மக்கள் அன்றாடம் வாங்கும் அத்தியாவசிய பொருட்கள் மீது சுமையை ஏற்படுத்தாது என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் குறிப்பிட்டார்.

*இ-பான்கார்ட்* (14)

இ-பான்கார்டுகளை பதிவிறக்கம் செய்ய கேட்டுக் கொள்ளும் வகையில் மத்திய அரசு அனுப்புவது போன்ற மின்னஞ்சல் பலருக்கும்

வந்துள்ளதாகவும், இது போலியான மின்னஞ்சல் என்றும், இந்திய பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை சரிபார்ப்பு பிரிவு தெரிவித்துள்ளது. நிதி மற்றும் முக்கியமான தகவல்களை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்கும் மின்னஞ்சல்கள் இணைய இணைப்புகள் வீடியோ அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளுக்கு பதில் அளிக்க வேண்டாம் என்றும் பத்திரிக்கை தகவல் அலுவலகம் அறிவுறுத்தி உள்ளது. மேலும், மத்திய அரசு சார்பில், பெண்களுக்கு இலவச ஸ்கூட்டிகளை வழங்குவதாக தெரிவிக்கும் வீடியோ பலருக்கும் அனுப்பப் படுவதாகவும், இது போலியானது என்றும் பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் உண்மை சரிபார்ப்பு பிரிவு தெரிவித்துள்ளது. மத்திய அரசால் அத்தகைய திட்டம் எதுவும் தொடங்கப்படவில்லை என்றும், அதிகாரபூர்வ ஆதாரங்களை மட்டுமே மக்கள் நம்ப வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

வானிலை (8)

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழ்நாடு, புதுச்சேரி, மற்றும் காரைக்காலின் ஒரு சில பகுதிகளில், வரும் 14 ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளிலும், தென்மேற்கு வங்க கடல் பகுதிகளிலும் அடுத்த 2 நாட்களுக்கு சூறாவளி காற்று மணிக்கு 35 முதல், 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே, 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.